## மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## பயிற்சிப் பரீட்சை- 2020

**தரம் 13 (2020)** **கணக்கீடு 33-T-1** **இரண்டு மணித்தியாலம்**

- 01 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்களுக்குச் சரியான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் இரண்டு புள்ளிகள் உரித்தாகும்.

| வினாத்தாள் 1 | |
|---|---|
| வினா இல | புள்ளிகள் |
| 01-30 | ……… |
| 30-50 | ……… |
| மொத்தம் | ……… |

- **இலக்கம் 1 – 30 வரையான வினாக்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைகளுள் சரியான விடையினைத் தெரிவு செய்து விடையின் இலக்கத்தை புள்ளிக்கோட்டின் மீது எழுதவும்**

1) பின்வருவனவற்றுள் எது இலங்கையில் பின்பற்றப்படும் "நிதி அறிக்கையிடலுக்கான எண்ணக்கரு சட்டவாக்கத்தின் படி" நிதித் தகவல்களின் மேம்படுத்த வேண்டிய பண்புசார் குணாதிசயங்களாகக் கருதப்படுகின்றது.
   1. ஒப்பீட்டு ரீதியான தன்மை, பொருத்தமான தன்மை
   2. நம்பகத்தன்மை கொண்ட பிரதிநிதித்துவம், பொருத்தமான தன்மை
   3. விளங்கிக் கொள்ளக்கூடிய தன்மை, நம்பகத் தன்மை கொண்ட பிரதிநிதித்துவம்
   4. ஒப்பீட்டுரீதியான தன்மை, காலந்தவறாமை
   5. காலந்தவறாமை, பொருத்தமான தன்மை (……... )

❖ 2), 3), 4) ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

ஆதி என்பவர் 01.07.2019 இல் ரூ.500 000 காசினை முதலிட்டு வியாபாரம் ஒன்றை ஆரம்பித்ததுடன் 2019 யூலை மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றன.

01.07.2019 இல் ரூ.180 000 கிரயமுடைய பொருட்கள் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்டது.
07.07.2019 இல் நந்தனுக்கு ரூ.150 000கிரயமான பொருட்கள் ரூ.180 000 ற்கு விற்கப்பட்டது.
10.07.2019 இல் நந்தனால் ரூ.30 000 கிரயமுடையதும் ரூ.36 000 பட்டியல் விலையிடப்பட்ட பொருட்கள் திருப்பி அனுப்பப்பட்டது.
21.07.2019 இல் நந்தனிடமிருந்து கிடைக்கவேண்டிய முழுத்தொகையும் 5% கழிவு வழங்கிய பின்னர் பெறப்பட்டது.

2) நந்தனிடம் மேற்கொண்ட கொடுக்கல் வாங்கல்களை அவை நிகழ்ந்த ஒழுங்குவரிசையின் அடிப்படையில் ஆதி வியாபாரத்தின் புத்தகங்களில் பதிவதற்கு பயன்படுத்தப்பட்ட மூல ஆவணங்களாக அமைவன.
   1. பட்டியல், வரவுத்தாள், கொடுப்பனவு உறுதிச்சீட்டு
   2. பட்டியல், நாட்குறிப்பு கைச்சாத்து, கொடுப்பனவு உறுதிச்சீட்டு
   3. பட்டியல், வரவுத்தாள், பற்றுச்சீட்டு
   4. பட்டியல், செலவுத்தாள், பற்றுச்சீட்டு
   5. பட்டியல், வரவுத்தாள், கொடுப்பனவுக் கைச்சாத்து, பற்றுச்சீட்டு (………)

3) 01.07.2019 இலிருந்து 10.07.2019 வரை ஆதி வணிகத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்கு பயன்படுத்தப்பட்ட மூலப்பதிவேடுகளின் ஒழுங்கு வரிசை
   1. காசுக்கொடுப்பனவு நாளேடு, விற்பனை நாளேடு, உட்திரும்பல் நாளேடு
   2. காசுக்கொடுப்பனவு நாளேடு, விற்பனை நாளேடு, பொது நாளேடு
   3. காசுப்பெறுவனவு நாளேடு, கொள்வனவு நாளேடு, வெளித்திரும்பல் நாளேடு
   4. காசுக்கொடுப்பனவு நாளேடு, கொள்வனவு நாளேடு, கொள்வனவு திரும்பல் நாளேடு
   5. காசுப்பெறுவனவு நாளேடு, விற்பனை நாளேடு, விற்பனைத் திரும்பல் நாளேடு (………)

4) ஆதி வியாபாரத்தின் ஏடுகளில் 2019 யூலை மாதத்திற்கான இலாபமும், 31.07.2019 இல் உள்ளவாறான காசு மீதியுமாக அமைவது,

| மாதத்திற்கான இலாபம் (ரூ.000’) | காசு மீதி (ரூ.000’) |
|---|---|
| 1. 16 800 | 183 200 |
| 2. 16 800 | 456 800 |
| 3. 24 000 | 456 800 |
| 4. 31 200 | 456 800 |
| 5. 31 200 | 183 200 |

(………)

5) கஸ்தூரி வணிகத்தில் 2020.01.12 இல் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| வங்கிக்கடன் பெறல் | ரூ.150 000 |
| கடனுக்கு பொருள் கொள்வனவு | ரூ. 50 000 |

மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தினைச் சரியாகக் காட்டும் விடையினைத் தெரிவு செய்க

1. சொத்து அதிகரித்தல் ரூ.100 000 பொறுப்பு அதிகரித்தல் ரூ.100 000
2. சொத்து அதிகரித்தல் ரூ.100 000 பொறுப்பு குறைதல் ரூ.100 000
3. சொத்து அதிகரித்தல் ரூ.200 000 பொறுப்பு அதிகரித்தல் ரூ.200 000
4. சொத்து குறைதல் ரூ.200 000 பொறுப்பு குறைதல் ரூ.200 000
5. சொத்து அதிகரித்தல் ரூ.200 000 உரிமை குறைதல் ரூ.200 000 (………..)

6) வியாபாரமொன்றின் கடன்கொடுத்தோர் ஒருவரின் ரூ.200 000 மீதியானது அதன் உரிமையாளரால் அவரின் சொந்தப் பணத்தில் இருந்து கொடுத்துத் தீர்க்கப்பட்டது. இதன் போது கடன்கொடுத்தோர் ரூ.10 000 கழிவினை அனுமதித்துள்ளனர். இக்கொடுக்கல் வாங்கல்களினால் பொறுப்புக்கள், உரிமையாண்மை என்பவற்றில் ஏற்பட்ட தாக்கங்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் காட்டப்படுவது,

| பொறுப்புக்கள் | உரிமையாண்மை |
|---|---|
| 1. ரூ.190 000 இனால் குறையும் | ரூ.190 000 இனால் குறையும் |
| 2. ரூ.190 000 இனால் குறையும் | ரூ.190 000 இனால் அதிகரிக்கும் |
| 3. ரூ.200 000 இனால் குறையும் | ரூ.200 000 இனால் அதிகரிக்கும் |
| 4. ரூ.200 000 இனால் அதிகரிக்கும் | ரூ.200 000 இனால் அதிகரிக்கும் |
| 5. ரூ.210 000 இனால் குறையும் | ரூ.210 000 இனால் அதிகரிக்கும் |

(……….)

7) நிறுவனமொன்றின் 2019.03.31 இல் வருமானக் கூற்றின்படி எடுக்கப்பட்ட தேறிய இலாபம் ரூ.72 500 ஆகும். கடன்பட்டோர் மீதி மீது 10% வியாபார வருமதிகளின் எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படிகள் வருமானக்கூற்று தயாரிக்கும் போது கருத்தில் கொள்ளப்பட்டது.
தேறியலாபம் கணிக்கப்பட்ட பின்னர் பின்வரும் தவறு இனங்காணப்பட்டது.
காசு விற்பனை ரூ.20 000 கடன்பட்டோரிடம் பெற்ற காசாகக் கருதி பேரேட்டில் பதியப்பட்டிருந்தது.
மேற்கூறப்பட்ட தவறுகள் திருத்திய பின்னர் தேறியலாபம்

1. ரூ.90 500  2. ரூ. 92 000  3. ரூ.70 500
4. ரூ.94 500  5. ரூ.74 500 (……….)

8) 31.03.2019 இல் வணிகமொன்றின் காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூ.48 000 வரவு மீதியாகும். அதே தினத்தில் வங்கிக் கூற்று மீதி 85 000 ஆகும். வேறுபாட்டிற்கான காரணங்கள் வருமாறு

- பெற்ற நிலையான வைப்பு வட்டி வருமானம் காசேட்டில் சீராக்கப்படாதவை ரூ. 16 000
- வங்கி அறவிட்ட வங்கிக் கட்டணம் ரூ. 2 000
- வரையப்பட்டு இன்னமும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூ. 40 000
- கொடுப்பனவிற்காக வழங்கப்பட்டு மதிப்பிழந்த காசோலை ரூ. 9 000

2019.03.31 இல் வணிகத்தால் வைப்புச் செய்து இன்னமும் தீர்வையாகாத காசோலை எவ்வளவு?

1. ரூ. 57 000  2. ரூ. 71 000  3. ரூ. 26 000
4. ரூ. 111 000  5. ரூ. 73 000 (………)

9) அம்பிகை பொதுக்கம்பனியில் காணப்பட்ட ஆதனம் பொறி உபகரணங்களில் உள்ள கட்டடத் தொகுதி ஒன்று வேறு வணிகம் ஒன்றிற்கு மாதாந்தம் ரூ.10 000 வாடகை வருமான ஒப்பந்தப்படி விடப்பட்ட வகையில் பெற்ற வாடகை ரூ.180 000 வருமானக்கூற்றில் வருமானமாக உட்படுத்தி இருந்தது. மேற்கூறப்பட்ட காசுப் பெறுவனவு தொடர்பில் மீறப்பட்ட எண்ணக்கரு தொடர்பாக சரியானது / சரியானவை எது / எவை?

A - இணைதல் B – தேறல் C – அட்டுறு

1. A மட்டும் 2. A,B மட்டும் 3. B, C மட்டும்
4. A, C மட்டும் 5. A, B, C ஆகியன எல்லாம் (………)

10) பசுபதி கம்பனியானது 2019.12.31 இல் முதல் தடைவ ரூ.1750 000 ற்கு கொள்வனவு செய்த காணியினை ரூ. 2 000 000 ஆக மீள்மதிப்பிட்டு நிதிக்கூற்றில் ரூ.250 000 ஏனைய முற்றுமடங்கிய வருமானமாகவும் ரூ. 2 000 000 சொத்தாகவும் அறிக்கைப்படுத்தியது. இச் சந்தர்ப்பத்தில் பயன்படுத்திய எண்ணக்கருவும் மீறப்பட்ட எண்ணக்கருவும் முறையே

1. இணைதல், பொருண்மை 2. இணைதல், தொடர்ந்தியங்கும் 3.தேறல், பாதுகாப்பு
4. வெளிப்படுத்தல், வரலாற்றுக்கிரயம் 5. தொடர்ந்தியங்கும், வரலாற்றுக்கிரயம் (………..)

11) கவின் வணிகத்தின் 31.03.2019 இல் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டு மீதி ரூ.42 000 ஆகக் காணப்பட்டது. அத்தினத்தில் கடன்கொடுத்தோர் பட்டியலின் மீதிகளின் மொத்தமானது இக் கட்டுப்பாட்டு கணக்கு மீதியுடன் சமப்படவில்லை.

பின்னர் மேற்கொண்ட கணக்கு பரிசீலினையின் போது பின்வரும் வழுக்கள் அவதானிக்கப்பட்டன.

- செலவுத்தாள் ஒன்றின் பெறுமானம் ரூ.11 700 வெளித்திரும்பல் நாட்குறிப்பில் ரூ.17 000 எனப் பதியப்பட்டிருந்தது.
- காசோலை மறுக்கப்பட்டமை தொடர்பில் பெற்ற கழிவினை நீக்குவதற்கான பெறுமதி ரூ.5 000 கடன்கொடுத்தோர் நபர் கணக்கில் வரவில் ரூ.500 எனப் பதியப்பட்டிருந்தது.

தவறுகள் திருத்திய பின்னர் உள்ள கடன்கொடுத்தோர் பட்டியல் மீதி யாது?

1. ரூ.57 300 2. ரூ.59 000 3. ரூ.63 500
4. ரூ.53 500 5. ரூ.64 500 (………..)

12) அபி பொதுக்கம்பனியின் 2018.03.31 இல் செலுத்த வேண்டிய வாடகையானது ரூ.50 000 ஆக இருந்தது. கம்பனி கட்டடமொன்றை மாதாந்தம் ரூ. 40 000 வாடகைக்கு எடுத்திருந்தது. 2019 ஜனவரியில் இருந்து வாடகை ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்ட போது மாதாந்த வாடகை ரூ.50 000 ஆக தீர்மானிக்கப்பட்டு 2019.03.31 ல் முடிவடைந்த ஆண்டில் செலுத்திய வாடகை ரூ.620 000 ஆகும்.

31.03.2019 ல் முடிவடைந்த வருடத்திற்கு வாடகைச் செலவும் நிதிநிலமைக் கூற்றில் காட்டப்படும் வாடகையும் சரியானது எது?

| | வாடகைச் செலவு (ரூ.000’) | நிதிநிலமைக் கூற்று (ரூ.000’) |
|---|---|---|
| 1. | 480 | 90 சொத்து |
| 2. | 600 | 30 பொறுப்பு |
| 3. | 510 | 60 சொத்து |
| 4. | 600 | 60 பொறுப்பு |
| 5. | 510 | 110 சொத்து |

(………..)

13) பின்வருவனவற்றுள் எது உற்பத்தியல்லாத கிரயமகக் கருதப்படும்?

1. தொழிற்சாலை எரிபொருள் செலவு
2. புதிய பொருள் உற்பத்தி தொடர்பான விளம்பரப்படுத்தல் கிரயம்
3. உற்பத்தியில் பயன்படுத்திய நேரில் மூலப்பொருள் கிரயம்
4. தொழிற்சாலை காவலாளி சம்பளம்
5. உற்பத்தியில் பயன்படுத்திய மூலப்பொருள் (………)

14) இலங்கை கணக்கீட்டு நியமம் 02 (LKAS -02) இன் படி இருப்புக்களின் வகைகளாகக் கருதத் கூடியவற்றுள் சரியானது / சரியானவை,

A – மாற்றல் கிரயம்

B – விற்பனைக்கு தயாரான நிலைக்கு வைத்துள்ள இருப்பு

C – உற்பத்தி செய்வதற்காக அல்லது சேவை வழங்கலின் போது நுகருவதற்காக வைத்திருக்கப்படும் பொருட்கள்

D – கொள்வனவுக் கிரயம்

1. A, D ஆகியன 2. B, C ஆகியன 3. B,C,D ஆகியன
4. A,C,D ஆகியன 5. A,B,C,D ஆகிய எல்லாம் (………..)

15) லோஜி கம்பனி கிரயத்தில் 25% இலாபம் சேர்த்து பொருட்களை விற்பனை செய்கின்றது. 01.04.2018 தொடக்கம் 31.03.2019 வரையிலான நிதியாண்டுக்குரிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | (ரூ.000') |
|---|---|
| ஆரம்ப இருப்பு | 300 |
| இறுதி இருப்பு | 250 |
| கொள்வனவு | 1200 |
| உட்சுமை கூலி | 150 |
| விற்பனை அடிப்படையிலான தரகு | 200 |

31.03.2019 இல் முடிவடைந்த வருடத்தின் விற்பனையின் பெறுமதி யாது?

1. ரூ. 1 550 000 2. ரூ. 1 750 000 3. ரூ. 1 800 000
4. ரூ. 1 950 000 5. ரூ. 2 000 000 (………..)

16) பங்குடமையொன்றின் பங்காளர்களான அருண், பாலா என்போர் 2018.01.01 இல் முறையே ரூ.100 000, ரூ.150 000 மூலதனமாக ஈடுபடுத்தி இலாபநட்டம் சமமாகப் பகிர்தல் என்ற உடன்பாட்டில் அனைத்து இலாபப் பகிர்வினையும், அனைத்து எடுப்பனவுகளையும் மூலதனக் கணக்கில் பகிர்ந்து வந்துள்ளனர். 2018, 2019 இல் மூலதன மீதிகள் வருமாறு:-

| | 2018 | 2019 |
|---|---|---|
| அருண் | 132 000 | 140 000 |
| பாலா | 160 000 | 172 000 |

2018ம் ஆண்டில் அருணின் எடுப்பனவுகள் ரூ.6 000 ஆகவும், 2019 இல் பாலா எடுப்பனவு செய்யவும் இல்லை எனக் கொள்க. 2018ம் ஆண்டில் உழைக்கப்பட்ட தேறியலாபமும் 2019ம் ஆண்டில் அருணின் பற்றுக்களும் முறையே

1. ரூ. 64 000, ரூ. 2 000 2. ரூ. 48 000, ரூ. 6 000 3. ரூ. 52 000, ரூ. 6 000
4. ரூ. 76 000, ரூ. 4 000 5. ரூ. 36 000, ரூ. 2 000 (………..)

❖ வரையறுத்த அருண் கம்பனியின் 2019.03.31 இல் உள்ளவாறான பிரித்தெடுக்கப்பட்ட பரீட்சைமீதி வருமாறு

| | வரவு (ரூ.000') | செலவு (ரூ.000') |
|---|---|---|
| சம்பளம் (தேறியது) | 2475 | |
| ஊழியர் சேமலாப நிதிச் செலவு | 412.5 | |
| ஊழியர் நம்பிக்கை நிதிச் செலவு | 82.5 | |

மேலதிக கதவல்கள்:

கம்பனியின் வேலைகொள்வோர் மற்றும் ஊழியர் என்போருக்கான ஊழியர் சேமலாபநிதி பங்களிப்பானது முறையே 15%, 10% ஆகும். வேலைகொள்வோர் ஊழியர் நம்பிக்கை நிதிக்கு 3% பங்களிப்புச் செய்கின்றனர். இக் கம்பனி நடப்பாண்டில் மார்ச் மாதத்திற்கான ஊழியர் நம்பிக்கை நிதி, ஊழியர் சேமலாப நிதி, சம்பளம் தொடர்பாக எதுவித ஏற்பாடுகளையோ கொடுப்பனவுகளையோ மேற்கொள்ளவில்லை.

மேற்கூறிய தகவல்களைக் கொண்டு 17, 18 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

17) 2019.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஊழியர் தொடர்பான மொத்தச் செலவு, சென்மதியாகவுள்ள சம்பளம் யாது?

| | ஊழியர் தொடர்பான மொத்தச் செலவு (ரூ.000’) | சென்மதி சம்பளம் (ரூ.000’) | |
|---|---|---|---|
| 1. | 3 000 | 225 | |
| 2. | 3 540 | 225 | |
| 3. | 3 000 | 250 | |
| 4. | 3 540 | 270 | |
| 5. | 3 540 | 250 | (……….) |

18) 2019.03.31 இல் உள்ளவாறான நிதிநிலமைக்கூற்றில் வெளிப்படுத்த வேண்டிய சென்மதி ஊழியர் சேமலாபநிதி, சென்மதி ஊழியர் நம்பிக்கை நிதி யாது?

| | சென்மதி ஊழியர் சேமலாபநிதி (ரூ.000’) | சென்மதி ஊழியர் நம்பிக்கை நிதி (ரூ.000’) | |
|---|---|---|---|
| 1. | 62.5 | 7.5 | |
| 2. | 25 | 7.5 | |
| 3. | 37.5 | 7.5 | |
| 4. | 750 | 90 | |
| 5. | 450 | 90 | (………..) |

19) 2018.04.01 இல் ஆரம்பிக்கப்பட்ட ராஜ் உற்பத்திக் கம்பனி தொடர்பான விபரம் பின்வருமாறு

| | |
|---|---|
| கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்கள் | 800 |
| நேர்கூலிக் கிரயம் | 400 |
| உற்பத்தி மேந்தலை | 200 |
| உற்பத்தியல்லாத மேந்தலை | 100 |

**மேலதிகத் தகவல்கள்:**

1. நடப்பாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்களில் 25% பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன் முடிவுப்பொருட்களில் 20% விற்கப்படாமலும் இருந்தன.
2. வணிகம் கிரயத்தில் 25 % இலாபம் சேர்த்து பொருட்களை விற்பனை செய்கின்றது

2019.03.31. இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் மற்றும் நிதிநிலமைக் கூற்றில் வெளிப்படுத்த வேண்டிய சரக்கிருப்பு முறையே,

1. ரூ.240 000, ரூ.200 000  2. ரூ.140 000, ரூ.200 000  3. ரூ.140 000, ரூ.440 000
4. ரூ.240 000, ரூ.440 000  5. ரூ.162 500, ரூ.200 000  (………..)

❖ வரையறுக்கப்பட்ட சுந்தரா பொதுக்கம்பனியின் நிதிநிலமைக்கூற்றில் இருந்து 2019.03.31 இல் பெயர்த்தெடுக்கப்பட்ட சில தகவல்கள் வருமாறு:-

| | 000’ 2019.03.31 | 000’ 2018.03.31 |
|---|---|---|
| கூறப்பட்ட சாதாரண பங்குமூலதனம் | 20 000 | 16 000 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | 1 000 | 200 |
| பொதுஒதுக்கம் | 600 | 400 |
| நிறுத்தி வைத்த வருவாய் | 2 400 | 2 000 |

- நிதியாண்டில் ரூ.2 500 000 பெறுமதியில் உரிமை வழங்கல் மேற்கொள்ளப்பட்டது.
- நிறுத்தி வைத்த வருவாயிலிருந்து பொது ஒதுக்கத்திற்கு ஒரு தொகை மாற்றப்பட்டதுடன் ஒரு தொகை ஒதுக்கங்கள் மூலதனமாக்கப்பட்டது.
- 2019.03.31 இல் முடிவடைந்த கணக்காண்டில் இறுதிப் பங்கு லாபம் ரூ.500 000 பிரேரிக்கப்பட்டது. ஆண்டுக்கான வருமான வரிச் செலவு ரூ.600 000
- ஆதனம் பொறி உபகரணங்களில் உள்ள காணி முதல் தடவை மிகையாக மதிப்பிடப்பட்டதுடன் கட்டடம் முதல் தடவை ரூ.200 000 மிகையாக மதிப்பிடப்பட்டதை தற்போது அது ரூ.300 000 குறைத்து மீள் மதிப்பிடப்பட்டது.

மேற்கூறிய தகவல்களைக் கொண்டு 20, 21 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

20) 2019.03.31 இல் முடிவடையும் வருடத்தில் ஏனைய முற்றுமடங்கிய வருமானத்தில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு யாது?

1. ரூ.800 000
2. ரூ. 1 000 000
3. ரூ.750 000
4. ரூ.1 200 000
5. ரூ. 550 000

(……….)

21) 2019.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான இக் கம்பனியின் காலத்திக்கான இலாபம் எது?

1. ரூ. 2 400 000
2. ரூ. 400 000
3. ரூ. 2 100 000
4. ரூ. 3 100 000
5. ரூ. 2 700 000

(………..)

22) LKAS – 08 (கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீட்டு மாற்றங்கள் மற்றும் வழுக்கள்) நியமத்திற்கு ஏற்ப பின்வருவனவற்றுள் எது / எவை கணக்கீட்டு கொள்கை மாற்றங்களாகும்.

A - இருப்பு மதிப்பீட்டு முறையை முதல் உள் முதல் வெளி முறையில் இருந்து நிறையளிக்கப்பட்ட சராசரி முறைக்கு மாற்றுதல்

B - பெறுமானத் தேய்வு முறையை நேர்கோட்டு முறையில் இருந்து ஒடுங்குபாக முறைக்கு மாற்றுதல்

C - வட்டிச் செலவினத்தை நிதிச் செலவில் வெளிப்படுத்தாமல் ஆதனம் பொறி உபகரணக் கிரயத்துடன் சேர்த்தல்

D - ஆதனம், பொறி, உபகரணங்களை கிரயத்தில் இருந்து விலக்கி மீள்மதிப்பீட்டு பெறுமதியில் காட்டுதல்

1. A,B,C
2. B,C,D
3. A,C,D
4. A,C
5. A,B,C,D

(………)

23) வரையறுக்கப்பட்ட கஜன் பொதுக்கம்பனியின் 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் 15.06.2019 இல் அங்கீகரிக்கப்பட்டது. 31.03.2019 தொடக்கம் 15.06.2019 வரையான காலப்பகுதியினுள் பின்வரும் நிகழ்வுகள் கம்பனியில் இடம்பெற்றிருந்தன.

A – 2019.03.31 இல் உள்ள ஆதனம் பொறி உபகரணங்களில் உள்ள காணி ரூ.1 200 000 கிரயப் பெறுமதியானதை அரசு வீதிப் போக்குவரத்துத் தேவைக்காக 15.05.2019 இல் சுவீகரித்தமையால் ரூ. 1 000 000 இழப்பீடாக கம்பனிக்கு அரசு செலுத்தியது.

B – வாடிக்கையாளர் ஒருவரினால் 15.04.2018 இல் நிறுவனத்திற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கு தொடர்பில் நட்டஈடாக ரூ.50 000 நிறுவனம் செலுத்த வேண்டும் என 23.04.2019 இல் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

C – 2019.03.31 இல் கம்பனியில் வைத்திருக்கப்பட்ட வியாபார இருப்புக்கள் ரூ.400 000 கிரயமானவை ரூ.40 000 செலவில் 18.04.2019 இல் கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது.

D – 18.02.2019 இல் இடம்பெற்ற கடன்விற்பனை தொடர்பாக உருவான ரூ.60 000 கடன்பட்டோர் 10.04.2019 இல் முறிவடைந்தவராக நீதிமன்றம் அறிவித்திருந்தது.

LKAS 10 (அறிக்கையிடும் காலத்திற்கு பின்னரான நிகழ்வுகள்) நியமத்திற்கேற்ப 31.03.2019 இல் முடிவடையும் வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களில் சீராக்க வேண்டிய நிகழ்வு / நிகழ்வுகள் எது / எவை?

1. A, B மாத்திரம்
2. A,B, D மாத்திரம்
3. B,C,D மாத்திரம்
4. B, D மாத்திரம்
5. B, C மாத்திரம்

(………)

❖ பின்வரும் தகவல்கள் மாறன் பொதுக்கம்பனியுடன் தொடர்புடையதாகும்

2019.03.31 இல் முடிவடையும் ஆண்டுக்கான முற்றுமடங்கிய வருமானக்கூற்று

| | (ரூ.000') |
|---|---|
| ஆண்டுக்கான நட்டம் | 200 |
| நிலையான வைப்பு வட்டி வருமானம் | 50 |
| மோட்டார் அகற்றல் இலாபம் | 80 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணத் தேய்வு | 250 |
| வியாபார வருமதிகளின் எதிர்பார்க்கை நட்டங்களுக்கான படிகள் | 100 |
| மீள் மதிப்பு மிகை காணி | 400 |

வணிகத்தின் சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பான தகவல்கள் வருமாறு

| | 2019.03.31 (ரூ.000’) | 2018.03.31 (ரூ.000’) |
|---|---|---|
| ஆதனம் பொறி மற்றும் உபகரணம் | 12 300 | 12 000 |
| வியாபார வருமதிகள் கொண்டு செல் தொகை | 600 | 420 |
| சரக்கிருப்பு | 100 | 140 |
| நிலையான வைப்பு (2 வருடங்கள்) | 500 | - |
| காசும் காசுக்கு சமனானவையும் | 2 250 | 750 |
| வியாபார சென்மதிகள் | 80 | 20 |

**மேலதிகத் தகவல்கள்**

1. நடப்பாண்டில் ரூ.12 00000 கொண்டுசெல் பெறுமதியுடைய மோட்டார் அகற்றப்பட்டது.
2. நடப்பாண்டில் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட காணியானது கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் மீள்மதிப்பீடு செய்த போது ரூ.300 000 நட்டம் ஏற்பட்டது.

மேற்படி தகவல்களைக் கொண்டு 24, 25 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

24) LKAS 7 காசுப்பாய்ச்சல் கூற்று நியமத்தின்படி 2019.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான செயற்பாட்டு நடவடிக்கையில் பயன்படுத்திய தேறிய காசு யாது?
1. ரூ.360 000 2. ரூ.460 000 3. ரூ.60 000
4. ரூ.160 000 5. ரூ.380 000 (……….)

25) 2019.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியீட்டல் நடவடிக்கை மூலம் உருவான தேறிய காசு யாது?
1. ரூ. 2480 000 2. ரூ. 2 080 000 3. ரூ. 35 10 000
4. ரூ. 520 000 5. ரூ. 720 000 (………)

26) கம்பனியொன்று உற்பத்தி செய்வதற்கு உத்தேசிக்கும் A பொருட்கள் தொடர்பிலான உற்பத்தி மட்டமும் மொத்தக் கிரயமும் கீழே தரப்பட்டுள்ளது.

| உற்பத்தி மட்டம் | மொத்தக்கிரயம் |
|---|---|
| 5 000 | 500 000 |
| 6 000 | 540 000 |

அலகொன்றிற்கான மாறும் கிரயமும் மொத்த நிலையான கிரயமும் முறையே
1. 40, 200 000 2. 40, 300 000 3. 50, 300 000
4. 90, 200 000 5. 100, 300 000 (………)

27) பின்வரும் கிரய வகைகளுள் இருப்பு மதிப்பீடு தொடர்பில் பயன்படுத்தப்படுகின்ற கிரயம் யாது?
A – நேர் உற்பத்திக்கிரயம் B - உற்பத்தி பொது மேந்தலைக்கிரயம்
C – சந்தர்ப்பக் கிரயம் D – ஆழ்ந்த கிரயம்
1. A 2. B 3. A, B 4. A,B,C 5. A,B,C,D (………)

28) கம்பனியொன்றின் மொத்த இலாப விகிதம் மாறாதிருக்கையில் பின்வருவனவற்றுள் எது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது நடைமுறையாண்டின் தேறிய இலாப விகிதத்தைக் குறைவடையச் செய்யும்?
A – நடைமுறைவருடத்தில் உள்ள சரக்கிருப்பின் தேறிய தேறத்தக்க பெறுமதியானது அதன் கிரயத்தை விடக் குறைவாக இருத்தல்
B - ஏனைய வருமானத்தில் குறைவு
C – கட்டடங்கள் முதற் தடவையாக மீள்மதிப்பிட்ட போது ஏற்பட்ட பற்றாக்குறை
D – சாதாரண பங்குதாரர்களுக்கான இடைக்காலப் பங்குலாபக் கொடுப்பனவு
1. A, B 2. B, C 3. A, B, C 4. A, B, D 5. A, B, C, D (………)

29) கிரய நடத்தையினைக் காட்டுகின்ற பின்வரும் வரைபடங்களில் நிலையான கிரயத்தையும் மாறும் கிரயத்தையும் காட்டும் வரைபடம் / வரைபடங்கள் எது / எவை?

A


B


C


D


1) A, D 2)B, D 3) A, B ,D 4) B, C, D 5) B மட்டும்

30) கம்பனியொன்றின் மூலப்பொருள் தொடர்பான இருப்புத் தகவல்கள் வருமாறு

| | |
|---|---|
| மறுகட்டளை இருப்பு மட்டம் | 3 000 அலகுகள் |
| சராசரிக் கட்டளைக்காலம் | 4 மாதம் |
| உயர் கட்டளைக்காலம் | 5 மாதம் |
| இழிவுப் பாவனை | 400 அலகுகள் |
| மறுகட்டளைத் தொகை | 2400 அலகுகள் |

இழிவு இருப்பு மட்டமும் உயர்வு இருப்பு மட்டமும் முறையே

| | இழிவு இருப்பு மட்டம் (அலகுகள்) | உயர்வு இருப்பு மட்டம் (அலகுகள்) |
|---|---|---|
| 1. | 1000 | 3800 |
| 2. | 1800 | 3800 |
| 3. | 2000 | 5400 |
| 4. | 1000 | 4200 |
| 5. | 900 | 5400 |

(………)

**இலக்கம் 31 தொடக்கம் 50 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடையை புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

31) பின்வரும் பேரேட்டுக் கணக்குகள் தொடர்பான கணக்கீட்டு மூலங்களைக் குறிப்பிடுக

| **கணக்கு** | **மூலங்கள்** |
|---|---|
| 1. VAT கணக்கு வரவு மீதி | ………………………………. |
| 2. ஊழியர் இழப்பீட்டிற்கான ஏற்பாட்டுக் கணக்கு | ……………………………….. |
| 3. முற்பணமாகப் பெற்ற அங்கத்தவர் சந்தா | ……………………………….. |
| 4. ஆதனம், பொறி திரண்ட தேய்வுக் கணக்கு | ……………………………….. |

32) பின்வருவன கணக்கீட்டுச் சூழலுடன் தொடர்புடைய சூழற் காரணிகள் தரப்பட்டுள்ளன. அவற்றுக்குப் பொருத்தமான சூழலைக் குறிப்பிடுக

| **மாறிகள்** | **சூழல்** |
|---|---|
| 1. ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களுக்கு கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தேய்விடல் | …………………………… |
| 2. அரசு கடன்களுக்கான வட்டி வீதத்தைக் குறைத்தல் | ……………………………. |
| 3. புதிய தொழில்நுட்ப உபகரணங்களின் பயன்பாடு | ……………………………. |
| 4. கணக்கீட்டுடன் தொடர்புடைய வழக்கின் தீர்ப்புக்கள் | …………………………….. |

33) சானு வணிகத்தின் 2020 ஜனவரி மாதத்திற்கான கொள்வனவு நாளேடு கீழே தரப்பட்டுள்ளது.

கொள்வனவு நாளேடு

| திகதி | பட்டியல் இல | வாடிக்கையாளர் | பெறுமதி (ரூ.000’) | VAT (000’) | மொத்தப் பெறுமதி (ரூ.000’) |
|---|---|---|---|---|---|
| 04.01 | 101 | விஜி | 700 | 140 | 840 |
| 18.01 | 204 | றஜி | 1200 | 240 | 1440 |
| 31.01 | | பொதுப்பேரேட்டிற்கு மாற்றியது | 1900 | 380 | 2280 |

ஜனவரி மாதத்தில் கொள்வனவு நாளேட்டில் இருந்து பொதுப்பேரேட்டிற்கு மாற்றுவதற்கான நாட்குறிப்பு பதிவினை எழுதுக.

………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………
………………………………………………………………………………………………………………

34) பின்வரும் சந்தர்ப்பங்களுக்கு மிகப் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருக்களைக் குறிப்பிடுக.

| **சந்தர்ப்பம்** | **கணக்கீட்டு எண்ணக்கரு** |
|---|---|
| 1. இருப்பு வீழ்ச்சி நட்டம் வருமானக் கூற்றில் செலவினமாகக் காட்டப்படுதல் | ……………………………….. |
| 2. குத்தகை அடிப்படையில் வாங்கிய மோட்டார் வாகனம் நிதிநிலமைக்கூற்றில் சொத்தாக வெளிப்படுத்தல் | ………………………………… |
| 3. 2019.03.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று எனத் தலைப்பிடல் | ………………………………….. |
| 4. பங்குடமையில் உழைக்கப்பட்ட இலாபம் பங்காளரிடையே பகிர்ந்தளிக்கப்படல் | ………………………………….. |

❖ 35, 36 ம் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

பூரணி, நாரணி நடாத்தி வரும் பங்குடமை வணிகத்தின் 2019.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான நடைமுறைக் கணக்கு தொகுப்பு பின்வருமாறு

| | பூரணி | நாரணி |
|---|---|---|
| 2018.04.01 இல் மீதி | 60 000 | (10 000) |
| சம்பளம் | 80 000 | 60 000 |
| கடன்வட்டி | - | 10 000 |
| மூலதனவட்டி | 40 000 | 30 000 |
| இலாபப்பங்கு | 60 000 | 30 000 |
| செலுத்திய சம்பளம் | (20 000) | (10 000) |

மேலதிக தகவல்கள்

பங்குடமை ஒப்பந்தப்படி பங்காளர்களின் மூலதனக் கணக்கு மீதிக்கு 5% வட்டி செலுத்தப்படுகின்றது.

35) 2019.03.31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் யாது?

……………………………………………………………………………………………………………………

36) 2019.03.31 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்றில் வெளிப்படுத்த வேண்டிய உரிமையாண்மை யாது?

……………………………………………………………………………………………………………………

37) ஒப்பந்தம் ஒன்று குத்தகையாக இனங் காண்பதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய அளவீடுகள் எவை?
…………………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………………

38) அக்ஷயா PLC நிறுவனத்தின் 2018.03.31 இல் நிதிநிலமைக் கூற்றில் இருந்து பிரித்தெடுக்கப்பட்டவை

| விபரம் | ரூபா(000') |
|---|---|
| கூறப்பட்ட மூலதனம் | 2 000 |
| (ஒவ்வொன்றும் ரூ.10 வீதம் வழங்கப்பட்ட 200 000 சாதாரண பங்குகள்) | |
| நிறுத்தி வைத்த வருவாய் | 800 |

2019.03.31 இல் முடிவடையும் வருடத்தில் கம்பனியானது 2018.06.01 இல் ஒவ்வொன்றும் ரூ.10 ஆன 30 000 பங்குகளை ஒதுக்கங்களைப் பயன்படுத்தி மூலதனமாக்கியது. 2018.10.01 இல் ஒவ்வொன்றும் ரூ. 10 ஆன 40 000 பங்குகளை உரிமை வழங்கல் செய்தது.

1. ஒதுக்கங்களை மூலதனமாக்குவதற்கான பொது நாட்குறிப்பைத் தருக?
…………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………
2. 2019.03.31 இல் உரிமையாண்மை யாது ?
…………………………………………………………………………………………………

39) பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அதற்கு நேரே எழுதுக,
1. சிக்கனக்கட்டளையிடும் தொகையில் இழிவு இருப்பு மட்டம் பூச்சியம் ஆகும் …………
2. உற்பத்தி மட்டம் அதிகரிக்கும் போது அலகுக்கான மாறும் கிரயம் அதிகரிக்கும் …………
3. நிகழத்தக்க பொறுப்புக்கள் பொதுவாக நிதிநிலமைக்கூற்றில் காட்டப்படுகின்றன. …………
4. சாதாரண பங்குதாரர்களுக்குக் குறிப்பிட்ட நிதியாண்டின் பின்னர் பங்குலாபத்தை முன்மொழிதலை வெளிப்படுத்தல் மாத்திரம் செய்தல் வேண்டும் ………….

40) பின்வரும் தகவல்கள் பாடும்நிலா விளையாட்டுக்கழகத்தின் சந்தாவுடன் தொடர்பானவை

| விபரம் | 31.03.2019 | 31.03.2018 |
|---|---|---|
| முற்பணமாக பெற்ற சந்தா | 25 200 | 9 600 |
| நிலுவையாகவுள்ள சந்தா | 24 000 | 12 000 |

அங்கத்தவர் ஒருவருக்கான மாதாந்த சந்தா ரூ.100 ஆகும். 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்தில் 60 அங்கத்தவர்கள் இருந்துள்ளனர். 31.03.2019 இல் முடிவடைந்த வருடத்திற்காக பின்வருவனவற்றைக் கணிக்குக.

1. காசாகப் பெறப்பட்ட சந்தா ……………………………………………………………………..
2. வருமானமாக இனங்காணப்பட்ட சந்தா …………………………………………………………….

41) நிதிக்கூற்றுக்களின் அடிப்படைகளை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்ற நான்கு முறைகளையும் குறிப்பிடுக
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

42) களஞ்சியசாலையில் இருந்து பொருள்கள் விநியோகிக்கும் பொழுது அவற்றின் விலையிடலுக்காக பயன்படுத்தப்படுகின்ற சிறப்பு முறைகள் 2 தருக?
…………………………………………………………………………………………………………
…………………………………………………………………………………………………………

43) LKAS 37 இன் படி கீழே தரப்பட்ட நிகழ்வுகள் தொடர்பில் அது ஏற்பாடா, நிகழத்தக்க பொறுப்பா, நிகழத்தக்க சொத்தா என அதற்குரிய இடத்தில் குறிப்பிடுக.

1. வணிகத்திற்கு சொந்தமான காணியொன்றை அரசாங்கம் கையகப்படுத்தியமைக்கான இழப்பீட்டிற்கு விண்ணப்பித்திருத்தல் ……………………..
2. நிறுவனத்தின் பிரிவொன்றை மூடவேண்டி ஏற்பட்டதனால் செலுத்த வேண்டிய இழப்பீடு ……………………..
3. விற்பனை செய்த பொருள் தொடர்பான குறைபாடு தொடர்பில் உறுதிப்படுத்தப்பட்ட இழப்பீடு ……………………..
4. விற்பனை செய்யப்படும் பொருட்களுக்கு உத்தரவாதம் வழங்கல் …………………

44) உற்பத்திக் கம்பனி ஒன்றின் மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு சிக்கனக்கட்டளைத் தொகையினைப் பயன்படுத்துகின்றது. மூலப்பொருள் உருப்படியுடன் தொடர்பான தகவல்கள் வருமாறு:-

வருடாந்த கேள்வி 240 000 அலகுகள்

கட்டளை ஒன்றுக்கான கிரயம் ரூ.2 400

ஒரு அலகு இருப்பு வைத்திருப்பதற்கான கிரயம் ரூ.18

பின்வருவனவற்றைக் காண்க

1. சிக்கனக் கட்டளைத் தொகை EOQ ……………………………………………………
2. வருடத்தில் கட்டளை இடப்பட வேண்டிய எண்ணிக்கை………………………………….

45) SLFRS 16 (வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களுடன் தொடர்புடைய வருமானம்) இன் படி பின்வருவனவற்றைக் குறிப்பிடுக.

அ. நிறுவனமொன்றின் வருமானத்தை இனங் காணத்தக்க சந்தர்ப்பம்

……………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………

ஆ. "கொடுக்கல் வாங்கல் விலை" என்பதன் வரைவிலக்கணம்

…………………………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………………………

46) கம்பனியொன்றின் 31.03.2019 இல் உள்ளவாறான உரிமையாண்மை மீதான வருவாய் வீதம் மற்றும் கடன் உரிமையாண்மை வீதம் ஆகியன ஏனைய காரணிகள் மாறாதிருக்கையில் பின்வரும் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்களினாலும் அதிகரிக்குமா (I), குறையுமா (D) அல்லது மாறாதிருக்குமா (NC) என்பதனைக் குறிப்பிடுக. (எல்லாக் கொடுக்கல் வாங்கல்களும் 31.03.2019 இல் இடம்பெற்றவை எனக் கருதுக.

| கொடுக்கல் வாங்கல்கள் | உரிமையாண்மை மீதான திரும்பல் வீதம் | கடன் உரிமையாண்மை வீதம் |
|---|---|---|
| A – வங்கியிலிருந்து 12% வட்டிவீதத்தில் நீண்டகாலக் கடன் ஒன்றைப் பெறல் | ………………… | …………………….. |
| B – தற்போதுள்ள பங்குதாரர்கள் உரிமை வழங்கலை முழுமையாகப் பயன்படுத்தியுள்ள நிலையில் பங்குகளுக்கான உரிமை வழங்கலைச் செய்தல் | …………………. | ……………………… |

47) பின்வரும் தகவல்கள் கம்பனி ஒன்றினால் விற்பனை செய்யப்படும் பொருளொன்றுடன் தொடர்பானவை

| திகதி | விபரம் |
|---|---|
| 01.06.2019 | இருப்பு மீதி – (அலகொன்று ரூ.2 வீதம் 1000 அலகுகள்) |
| 06.06.2019 | கொள்வனவுகள் (அலகொன்று ரூ.4 வீதம் 2000 அலகுகள்) |
| 15.06.2019 | கொள்வனவுகள் (அலகொன்று ரூ.5 வீதம் 1000 அலகுகள்) |
| 29.06.2019 | விற்பனை (அலகொன்று ரூ.10 வீதம் 2500 அலகுகள்) |

கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு விலையிடல் முறையின் அடிப்படையிலும் பின்வருவனவற்றைக் கணிப்பிடுக

| விலையிடல் முறை | 2019 ஜீன் மாதத்திற்கான விற்ற சரக்கின் கொள்விலை (ரூ) | 30.06.2019 இல் இறுதி இருப்பு (ரூ) |
| --- | --- | --- |
| அ. முதல் உள் முதல் வெளி (FIFO) முறை | …………………….. | ………………………. |
| ஆ. நிறையிடப்பட்ட சராசரி | …………………….. | ……………………….. |

48) கம்பனியொன்றில் பங்கொன்றின் பிரதிபயனைப் பெற்றுக் கொள்ளும் வழிமுறைகள் 4 தருக?

………………………………………………………………………………………………………………...

………………………………………………………………………………………………………………...

………………………………………………………………………………………………………………...

………………………………………………………………………………………………………………...

49) LKAS 37 ற்கமைய ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்கள் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

| ஏற்பாடுகள் | நிகழத்தக்க பொறுப்புக்கள் |
| --- | --- |
| 1. ……………………………………………….. | 1……………………………………………... |
| ……………………………………………….. | ……………………………………………… |
| 2. ……………………………………………….. | 2……………………………………………... |
| ……………………………………………….. | ……………………………………………… |

50) பின்வரும் ஒவ்வொரு காசுப்பாய்ச்சலையும் செயற்பாட்டு நடவடிக்கை, முதலீட்டு நடவடிக்கை, நிதியீட்ட நடவடிக்கை என்பவற்றில் அவைகள் எவையென வகைப்படுத்திக் காட்டுக.

| காசுப்பாய்ச்சல் | நடவடிக்கை |
| --- | --- |
| A. இயக்குனர் சம்பளம் செலுத்தியது | |
| B. வட்டி வருமானப் பெறுவனவு | |
| C. வருடாந்த குத்தகைத்தவணைக்கட்டணம் செலுத்தியது | |
| D. கடன்பட்டோரிடம் பெற்ற காசு | |